# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.92/2020

## CNR.No.TNCB19000

Date:25.11.2024 PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கனகராஜ் | **வயது** | 65 |
| த/பெ | ரங்கசாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | மேட்டுப்பாளையம் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 25th November 2024.

வா.சா.2 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**1 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி பிரதிவாதிகளை எனக்கு தெரியும். 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் பக்கத்து பாகஸ்தர்கள் என்றால் சரிதான். வழக்கை தாக்கல் செய்த விபரம் தெரியும். எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். முதல் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் ரங்கசாமி. ரங்கசாமியின் தகப்பனார் பெயர் ராமைய கவுடர். குடும்ப பூர்வீக சொத்தை ரங்கசாமி, ராமைய கவுடர் மற்றும் ராஜப்பன் ஆகியோர்கள் 1961 ம் வருடத்திலேயே விற்பனை செய்துவிட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

அவர்கள் மூவரும் ரூ. 3,000/- த்திற்கு விற்பனைசெய்து விட்டு ஒவ்வொருவரும் தலா ரூ. 1,000/- வைத்துக்கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ரங்கசாமி, ராமைய கவுடர் மற்றும் ராஜப்பன் ஆகியோர்கள் குடும்ப சொத்தை விற்பனை செய்து விட்டதால் தாவா சொத்தில் உரிமை கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதி ராஜப்பன் என்பவரின் தனிப்பட்ட சொத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பாகம் கேட்ட சொத்து 1 ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் வாதிகள் பாகம் கேட்க இயலாது என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் காலை எண்கள் தெரியுமா என்றால் என்னுடையது தெரியும் அவர்களது காலை எண்கள் தெரியாது. தாவா சொத்து மாதையன், ராஜப்பன் மற்றும் லவகுசா ஆகியோர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் தற்போது யாரும்

விவசாயம் செய்வதில்லை. வழக்கு சொத்துபற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றும் வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல சம்மன் வரவில்லை. எந்த விபரமும் தெரியாமல் சாட்சி சொல்வதால் என்னுடைய சாட்சியம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.